வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 24.05.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு சுற்றுலா தலத்தையாவது உலக தரத்திற்கு இணையாக உருவாக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைபாடு குறித்த ஜெர்மனியின் ஆதரவிற்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துள்ளார்.

வளர்ந்து வரும் விளையாட்டு திறமைகளை ஊக்குவிப்பதற்காக எதிர்காலத்தில் கேலோ-இண்டியா வடகிழக்கு விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மத்திய அரபிக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளால் புதுச்சேரி உள்ளிட்ட 11 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

*பிரதமர்* 1 (8)

ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு சுற்றுலா தலத்தையாவது உலக தரத்திற்கு இணையாக உருவாக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நித்தி ஆயோக்கின் 10 ஆவது நிர்வாக குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய அவர், ஒரு மாநிலம்-ஒரு உலகளாவிய இலக்கு என்ற திட்டத்தின் கீழ் அனைத்து வசதிகளையும், உள்கட்டமைப்பையும் அனைத்து மாநிலங்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் அவர் கூறுகையில்……

(வாய்ஸ்)

*பிரதமர் வாய்ஸ் (20)*

நித்தி ஆயோக் திட்டம் அண்டை நகரங்களை சுற்றுலா தலங்களாக மேம்படுத்த வழிவகுக்கும் என்றும், எதிர்காலத்தில் நவீன மயமாக உள்ள நகரங்களை நோக்கி செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார். மத்திய அரசும், அனைத்து மாநிலங்களும் ஒன்றினைந்து டீம்-இண்டியா போல் செயல்பட்டால் எந்த இலக்கும் சாத்தியம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். இந்த ஆண்டின் கருப்பொருள் **2047 ஆம் ஆண்டு விக்சித் பாரதத்திற்கான விக்சித் ராஜ்யம்** என்பதாகும். இக்கூட்டம் நாடு எதிர்கொள்ளும் வளர்ச்சி சவால்கள் குறித்து ஆலோசிக்கவும், இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதில் மாநிலங்களின் பங்கு குறித்து ஒருமித்த கருத்தை உருவாக்கவும் சிறந்த தளமாக அமைந்ததாக கூறப்படுகிறது. தொழில்முனைவோரை ஊக்குவித்தல், திறன்களை மேம்படுத்துதல் மற்றும் நாடு முழுவதும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை இக்கூட்டத்தின் நிகழ்ச்சிகளில் அடங்கும். இந் நிகழ்ச்சியில் உத்திரபிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், ஆந்திரபிரதேச முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, இமாச்சலபிரதேச முதலமைச்சர் திரு சுக்விந்தர் சிங் சுகு, மத்திய பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ், சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோசாய், தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், மற்றும் நித்தி-ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஜெய்சங்கர் (13)

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைபாட்டிற்கு ஜெர்மனி அளித்த ஆதரவிற்கு மத்திய வெளியுறுவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துள்ளார். பெர்லினில் நடைபெற்ற வெளியுறவு கவுன்சில் கூட்டத்தில் பேசிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை சர்வதேச அளவில் இந்தியாவின் மீதான மதிப்பை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகள் மீதான இந்திய ராணுவத்தின் துல்லிய தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும், இந்தியா-ஜெர்மனி நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாகவும்  மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கூறினார். நெதர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி நாடுகளுக்கு 6 நாள் பயணம் மேற்கொண்ட திரு ஜெய்சங்கர் இன்று இந்தியா திரும்புகிறார்.

*மத்திய குழு* (18)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து விளக்கம் அளிப்பதற்காக பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பைஜெயந்த் பாண்டா தலைமையிலான அனைத்து கட்சி குழு இன்று பக்ரைன் சென்றடைந்தது. எல்லை தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை பக்ரைன் நாட்டு பிரதிநிதிகளிடம் இக்குழுவினர் எடுத்துரைக்க உள்ளனர். வெளியுறவுத் துறை செயலர் திரு ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, திரு குலாம்நபி ஆசாத் உள்ளிட்ட பலர் இடம்பெற்றுள்ள இக்குழு சவுதி அரேபியா, குவைத், அல்பேரியா நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ள உள்ளது.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சசிதரூர் தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர் இன்று அதிகாலை புதுடெல்லியில் இருந்து கயானாவிற்கு புறப்பட்டு சென்றனர். இக்குழு தொடர்ந்து அமெரிக்கா பனாமா, பிரேசில், கொலம்பியா நாடுகளுக்கும் செல்ல உள்ளது.

இதேபோல் திரு சஞ்சய்குமார் ஜா தலைமையிலான மற்றொரு குழுவினர் டொக்கியோவில் உள்ள இந்திய சமூகத்தினரிடையே ஆபரேஷன் சிந்தூர் குறித்து கலந்துரையாடினர்.

இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விரிவாக எடுத்துரைக்க பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இக்குழுவினர், உலக நாடுகளின் ஆதரவை திரட்டி வருகின்றனர்.

*மாண்டவியா* (16)

நாட்டில் வளர்ந்து வரும் விளையாட்டு திறமைகளை ஊக்குவிப்பதற்காக எதிர்காலத்தில் கேலோ-இண்டியா வடகிழக்கு விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா அறிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற ரைசிங் வடகிழக்கு முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு 2025 ன் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இந்த விளையாட்டுகள் ஒவ்வொரு ஆண்டும்

நடத்தப்படும் என்றும், ஒலிம்பிக் விளையாட்டுகள் மட்டுமல்லாமல் பாரம்பரிய விளையாட்டுகளும் இடம் பெறும் என்றும் கூறினார். கேலோ-இண்டியா விளையாட்டுகளை பாராட்டி பேசிய அவர், அடுத்த 10 ஆண்டுகளில் ஒலிம்பிக்கில் முதல் 10 நாடுகளில் ஒன்றாகவும், அடுத்த 25 ஆண்டுகளில் முதல் 5 நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா தனது இலக்கை நிர்ணயித்துள்ளதாக கூறினார். 2030 காமன்வெல்த் விளையாட்டு மற்றும் 2036 ஒலிம்பிக் போட்டிகள் நடத்துவதற்கான முயற்சிகளை இந்தியா தொடங்கி உள்ளது என்றும், எதிர்காலத்தில் பல சர்வதேச போட்டிகளை நடத்தவும் இந்தியா தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*மன் கீ பாத்* (9)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 122 ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், News-on-air மொபைல் செயலியிலும், தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைசச்கத்தின் யூ-டியூப் சேனல்களிலும் நேரடியாக ஒலிபரப்பப்படும். ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும். மீண்டும் இரவு 8 மணிக்கு இந்நிகழ்ச்சியின் தமிழாக்கம் மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

*பரம் வீர் சக்ரா 1 (7)*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1971ஆம் ஆண்டு, இந்தோ-பாக் போரின் போது ஸ்ரீநகர் விமான படை தளத்தை காப்பதில் அபார துணிச்சலை வெளிப்படுத்தி நாட்டிற்காக உயிர் தியாகம் செய்து பரம்வீர் சக்ரா விருது பெற்ற Flying Officer நிர்மல் ஜித்சிங் ஷெக்கான் குறித்து ஒரு தொகுப்பு......

**(வாய்ஸ்)**

*பரம் வீர் சக்ரா 2 (16)*

**(வாய்ஸ்)**

பஞ்சாப் மாநிலம் லூதியானா மாவட்டத்தில் பிறந்தவரான Flying Officer நிர்மல் ஜித்சிங் ஷெக்கான், 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்திய விமானப் படையில் சேர்ந்தவராவார். அவ்வாண்டு டிசம்பர் 14 ஆம் தேதி ஸ்ரீநகர் வான் பரப்பு, 6 பாகிஸ்தானிய சாபர்ஜெட் விமானங்களால் அடுத்தடுத்து தாக்குதலுக்கு உள்ளாயிற்று. Flying Officer நிர்மல் ஜித்சிங் ஷெக்கான் அந்த சமயத்தில், தயார்நிலைப் பணியிலிருந்தார். தலைக்குமேல் எதிரி விமானங்கள் சுற்றிக் கொண்டிருந்த நிலையில், Flying Officer ஷெக்கான், சொந்த பாதுகாப்பு குறித்து கொஞ்சமும் அஞ்சாமல், உயிரை துச்சமென எண்ணித் தனது விமானத்தை மேலெழுப்பி, இரண்டு எதிரி விமானங்களை தாக்கினார். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட வான் மோதலில் எதிரிகளின் ஒரு விமானம் வீழ்த்தப்பட்டு, மற்றொரு விமானம் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அதே சமயத்தில் எதிரி படையினரின் வேறு 4 சாபர்ஜெட் விமானங்கள் அங்கு வந்து ஷெக்கானின் விமானத்தை சுற்றி வளைத்தன. Flying Officer ஷெக்கான் இப்போதும் பின் வாங்காமல் தொடர்ந்து போராடத் துணிந்தார். இதைத் தொடர்ந்து தரையிலிருந்து குறைந்த உயரத்திலேயே கடும் சண்டை மூண்டதில், ஷெக்கானின்

*பரம் வீர் சக்ரா 3 (7)*

அயராத முயற்சிகளையும் மீறி அவரது விமானம் தாக்கப்பட்டு, அவர் உயிர் தியாகம் செய்ய நேரிட்டது. ஆயினும் ஸ்ரீநகர் பகுதியை தாக்குவதான நோக்கம் கடைசி வரை நிறைவேறாமல், எதிரி விமானங்கள் பின்வாங்கின. Flying Officer நிர்மல் ஜித்சிங் ஷெக்கானின் அபார துணிச்சல், விமானங்களை இயக்கும் திறன் மற்றும் உயிர் தியாகத்திற்காக, மரணத்திற்கு பிந்திய முறையில் அவருக்கு பரம்வீர் சக்ரா விருது

வழங்கப்பட்டது. Flying Officer நிர்மல் ஜித்சிங் ஷெக்கானுக்கு, நாடு தலை வணங்குகிறது.

ஐநா (16)

அப்பாவி மக்கள் என்ற போர்வையில் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பதுங்கி இருப்பதை அனுமதிக்க முடியாது என்று ஐநா பாதுகாப்பு சபையில இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. ஆயுத போராட்டங்களில் இருந்து பொதுமக்களை காப்பது குறித்து பாதுகாப்பு சபையில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற ஐநா-வுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் திரு பர்வதமேனி ஹரீஷ், எல்லைக்கு அப்பாலில் இருந்து பாகிஸ்தானால் தூண்டி விடப்படும் தீவிரவாதத்தால் இந்தியா பல்வேறு பாதிப்புகளை எதிர் கொண்டு வருவதாக கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் கொல்லப்பட்ட தீவிரவாதியின் உடலுக்கு பாகிஸ்தான் அரசின் உயரதிகாரிகள், ராணுவம் மற்றும் காவல் துறை அதிகாரிகள் அஞ்சலி செலுத்தியதன் மூலம் தீவிவாதத்திற்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருவது உறுதியாகி உள்ளது என்றும், மும்பை தாக்குதலில் இருந்து பஹல்காம் தாக்குதல் வரை பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். இதனிடையே, பாகிஸ்தானில் பதிவு

செய்யப்பட்ட விமானங்கள் இந்திய வான் எல்லையில் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை மத்திய அரசு ஜூன் 23 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

வானிலை (16)

தென்மேற்கு பருவமழை கேரளாவில் இன்று தொடங்கி உள்ளது. கொங்கன் கடற்கரைக்கு அப்பால் கிழக்கு மத்திய அரபிக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார். இந்நிலையில், ராமேஸ்வரம், பாம்பன், தூத்துக்குடி, குளச்சல், சென்னை, எண்ணூர், கடலூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி உள்ளிட்ட 11 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கோவை மாவட்டத்தில் கனமழைக்கான ஆரஞ்ச் அலர்ட் இன்று விடுக்கப்பட்டுள்ளதால், பேரிடர் மீட்பு குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கோவை மாவட்ட மலை பகுதிகளில் நாளை அதி கன மழை பெய்யக் கூடும் என்பதால், அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். மேலும், உதகை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சாரல் மழை பெய்து வருவதால் நிலச்சரிவு ஏற்படக் கூடிய 14 இடங்களில் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தன்னீரு கூறியுள்ளார்.

விளையாட்டு (11)

கோலாம்பூரில் நடைபெற்ற மலேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டிக்கு இந்தியாவின் முன்னனி ஷட்லர் கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளார். அரையிறுதி போட்டியில் தனகாவை 21-18, 24-22, என்ற நேர் செட்களில் வென்றதன் மூலம் இந்த ஆண்டின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் இந்தியர் ஷட்லர் என்ற பெருமையை கிடாம்பி ஸ்ரீகாந்த் பெற்றுள்ளார். நாளை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் சீனாவின் 4 வது நிலை வீராங்கனையான லீ ஷீ ஃபெங்கை எதிர் கொள்கிறார்.

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில் ஜெய்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி, டெல்லி கேப்பிடல்ஸ் அணியை எதிர் கொள்கிறது.

ஹஜ் (5)

ஹஜ் யாத்திரையை மேற்கொண்ட இந்தியர்கள் சவுதி அரேபியாவில் சுமுகமான மற்றும் தடையற்ற பயணத்தை உறுதி செய்வதற்காக மத்திய அரசின் ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் குறித்து பாராட்டு தெரிவித்துள்ளனர். ஹஜ் யாத்திரிகர்களுக்கு வசதியான மற்றும் கண்ணியமான பயணத்தை உறுதி செய்வதே நோக்கம் என்று மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.